// மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
சென்னை - 600 006

ந. க. எண். 16726 / அ4 / இ4 / 2021, நாள். 03 .11.2021.

******

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி - பயிற்சி - பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம் – இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்கள் விவரம் - ஆண்டுவாரியாக மற்றும் மாவட்டவாரியாக உள்ள படிவங்களில் பூர்த்தி செய்துஅனுப்பக் கோருதல் - தொடர்பாக.

பார்வை:
1. மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் அவர்களின் கடிதம் ந.க.எண். அ3/2969/2021, நாள். 02.11.2021.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) ந.க. எண். 16726/அ4/இ3/2021, நாள். 11.08.2021.

*****

பார்வை (1)ல் காணும் கடிதத்தில், அடிப்படைப் பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ளவர்களின் விவரங்களை இணைப்பப்பட்டுள்ள பட்டியலில் பூர்த்தி செய்து அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையில் பள்ளிகள் / அலுவலங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்களின் விவரங்கள் பார்வை (2)ல் காணும் செயல்முறைகளின்படி மாவட்டவாரியாகப் பெறப்பட்டு, விவரங்கள் தொகுக்கப்பட்டு பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

எனவே, மேற்காணும் தொகுப்புப் பட்டியலில் உள்ள பணியாளர்களின் விவரங்கள் தவிர கூடுதலாக சேர்க்க வேண்டிய பணியாளர்கள் மற்றும் அப்பட்டியலில் எவரேனும் விடுபட்டு இருப்பின் அப்பணியாளர்களின் விவரங்களை மட்டும் (53 வயதினைக் கடந்தவர்கள் இருப்பின் அவர்களை நீக்கிவிட்டு) இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து **08.11.2021** ~~**காலை**~~ நண்பகல் **12.00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு** அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

பணியாளர்களின் பெயர்ப்பட்டியல்

**இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி).**

பெறுநர் :-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல் :** இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 6.
**நகல் :** இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6.
**நகல் :** இயக்குநர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
**நகல் :** இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
**நகல் :** மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.

} தங்கள் இயக்ககம் சார்ந்த பணியாளர்களின் விவரங்களை அனுப்பி வைக்கும் பொருட்டு பணிந்து அனுப்பப்படுகிறது.

**நகல் :** இவ்வலுவலக "அ2" பிரிவு - பள்ளிக் கல்வி இயக்கக பணியாளர்கள் சார்பான விவரங்கள் அளிக்கும் பொருட்டு.